பக்கங்கள் 06 வாரநோக்கு விலை ரூபா 2-50

# விழிப்பு

விழி 01 திங்கட்கிழமை 23 03 1992 நோக்கு: 07

### "எங்கள் நாடு தமிழீழம்"

கடந்த 19 - 03 - 92 அன்று யாழ். மாவட்ட பாடசாலைகளில் தமிழீழத் தாயகத்தின் படம் திரைநீக்கம் செய்யப்பட்டது. ''எங்கள் நாடு தமிழீழம்'' என்ற வாசகம் படத்தில் பொறிக்கப்பட்டிருந்தது.

மாணவர் மத்தியில் தேசப்பற்றை வளர்க்கவும், எமது தேசம் பற்றிய அனைத்து விடயங்களை அறிந்து கொள்ளவும் இந்நிகழ்ச்சி வழிவகுத்தது.

## மணலாற்றில் வலிந்த தாக்குதல் தொடுத்த படையின் கனரக ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டமை

# புலிகளின் தந்திரோபாய தாக்குதலின் சாதனையே!

இராணுவத்தினர் தமிழீழத்தின் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த மணலாற்றின் மீது கடந்த 17 ஆம் திகதி "கஜபார" இராணுவ நடவடிக்கையை ஆரம்பித்தனர்.

கொக்குத்தொடுவாய் இராணுவ முகாமில் இருந்து கவசவாகனங்களுடனும் கனரக ஆயுதங்களுடனும் முன்னேறிய அணி புலிகளின் திடீர் அதிரடித் தாககுதலிற்கு உட்பட்டது.

இராணுவத்தின் வலிந்த தாக்குதல் ஒன்றின் போது கனரக ஆயுதங்கள் கைப்பற்றப் பட்டமை இதுதான் முதற்தடவையாகும்.

106மி.மீ பின்னுதைப்பற்ற பீரங்கி உட்பட கனரக இயந்திரத் துப்பாக்கிகள் முன்னணியில் கொண்டு வரப்படும் ஆயுதங்கள் அல்ல முன்னணியில் இருந்து 750 மீ. தொடக்கம் 1000 மீ பின்னுக்கே கடுமையான பாதுகாப்புடன் கொண்டுவரப்படுவன என்பது குறிப்பிடத் தக்கதாகும்.

இத் தாக்குதலில் கைப்பற்றப்பட்ட 106 மி மீ. பீரங்கி மூலம் ஒரு கிலோமீற்றர் தொலையில் வைத்தே டாங்கிகளையும், இலக்குகளையும் தகர்க்க முடியும் இவ் வகையில் டாங்கி எதிர்ப்பு ஆயுதங்களின் வளர்ச்சியைப் பொறுத்த வரை புலிகளின கரங்கள் நீண்டு வலிமையடைந்து வருகின்றன.

இவ் அதிரடித் தாக்குதலில் கனரக ஆயுதங்கள் கைப்பற்றப் பட்டமையும், ஆறு கவச வாகனங்கள் தகர்த்து எறியப்பட்டமையும் இராணுவத்தின் மனோ வலிமையைச் சிதைத்துள்ளது எதிர் காலத்தில் இத்தகைய வலிந்த தாக்குதல்களின் போது தாம் எதிர் நோக்கவுள்ள ஆபத்தை இராணுவத்தினருக்கு இத் தாக்குதல் உணர்த்தி நிற்கிறது

அதாவது ஒட்டுமொத்தமாய் எதிரியின் கனரக ஆயுதங்கள், தகவல் தொடர்பு மையம், இராணுவ கட்டளை மையம் ஆகிய அனைத்தின் பாதுகாப்பும் கேள்விக்குறியாகிஉள்ளது. இது இராணுவ வீரர்கள் மத்தியில் மட்டுமல்ல அதிகாரிகளின் மத்தியிலும பீதியை ஏற்படுத்திஉள்ளமையும் குறிப்பிடத் தக்கதாகும்.


## பின்தள வேலைகளில் ஆர்வத்துடன் மக்கள்

தமிழர்களின் பாரம்பரிய பிரதேசத்தில் கேந்திர முக்கியத்துவமுடைய மணலாறுமாவட்டத்தை தனது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்து தமிழர் தாயகத்தை இருகூறாக்குவதற்கு இலங்கை அரசானது தனது முப்படைகளையும் பயன்படுத்தி ''சஜபார'' என்ற மிகப்பெரிய இராணுவ நடவடிக்கையைமேற்கொண்டு வருகிறது. இந்த நடவடிக்கையை எதிர்கொள்ளும் போராளிகளுக்கான பின்தள வேலைகளை பொது மக்கள் பெரும் ஆர்வத்துடன் மேற்கொண்டு வருகிறார்கள்.

மேலும் இரவு பகல் பாராது பாடசாலை மாணவர்களும் பல்கலைக்கழக, மாணவர்களும் பொதுச்சேவை ஊழியர்களும், சனசமூக அங்கத்தவர்களும் உட்பட பெருந்தொகையானோர் இரத்ததானம் வழங்க முன்வந்துள்ளார்கள்.

பராமரிப்பிற்கான ஒழுங்குகளை மேற்கொள்ளும் அரங்கள் பணிமனையில் நூறுக்கும் அதிகமான சாரணர்களும் மற்றும் முதலுதவிப் படையினரும் மக்களும் நிரம்பி வழிவதை பார்வையிடக்கூடியதாகவுள்ளது விழுப்புண்ணேற்கும் புலி வீரர்களிற்கான முதலுதவிகளை அத்துறைசார்ந்தவர்களும் பொதுமக்களும் வழங்கி வருகின்றனர்.

## அன்னைபூபதி



மட்டு நகரினில் மாமாங்க வீதியில் மாதரசி கிடந்தாள் - ஒரு மாதம் கிடந்தபின் மக்களுக்காகவே மண்ணை அவள் துறந்தாள்

உலகை ஒரு கணம் உலுப்பிய புயலின் பெயர் இது. எம்மை ஆக்கிரமித்த அந்நியர்களையே அதிர வைத்த பூகம்பத்தைதின் பெயர் இது. தமிழீழ மக்களின் விடுதலை உணர்வின் தாரக மந்திரம் இது. நேற்றாகி, இன்றாகி, நாளையாகும் காலச் சூழலில் இவளின் காலடிச் சுவடுகள் [மறைந்து விடாது] நிலைத்து நிற்கும்.

இந்திய ஆக்கிரமிப்பாளர்கள் எம் அன்னை பூமியை அள்ளி விழுங்கிட நின்ற அந்த நாட்களை எண்ணிப் பாருங்கள். எங்கள் தாய்மண் மேலாதிக்க வாதிகளின் கொடூர நெருப்பில் கொதித்துக் கொண்டிருந்த காலத்தை நினைத்துப் பாருங்கள். அந்த நினைவுகள் இன்றும் கூட நெஞ்சுகளில் நெருப்பு மூட்டும் இந்த நேரத்தில் தான் பூபதி அம்மா போராடினார்.

(6ஆம் பக்கம் பார்க்க)

## விழித்தெழுவோம்! செயற்படுவோம்!!

# மண்ணிலே உறுதியாக கால் பதித்து..

இழப்புக்களால் இந்த மக்கள் சோர்வடைந்து மண்ணை விட்டு ஓடவில்லை. அகதி முகாம்களில் சீரான உணவு, உடை, உறையுள் வசதிகளின்றி வாழ்வின் எந்த அடிப்படைத் தேவைகளையும் பூர்த்தி செய்ய முடியாதவர்களாக இருந்தார்கள்.

எதிரியின் திட்டங்களைத் தகர்த்தெறிந்து இந்த மக்களுக்கென்று ஒரு பொருளாதார அடித்தளத்தை உருவாக்கவும் வாழ்வின் அத்தியாவசியமான அடிப்படைத் தேவைகளை உறுதிப்படுத்தவும் ஒரு சமூக பொருளாதார வளர்ச்சித் திட்டம் விடுதலைப் புலிகளின் திருமலை மாவட்டத் தொடர்பகத்தால் வெற்றிகரமாக நெறிப்படுத்தப்பட்டு வருகின்றது

## திருமலை மாவட்டம்

தமிழீழ தேசத்தின் வனப்பும் வளமும் தென் தமிழீழத்தில் மிகுந்திருக்கின்றது. திருக்கோணமலை தமிழீழத்தின் தலை நகர். இது நீண்ட நெடுங்காலமாகத் தமிழ் மக்களின் பாரம்பரிய பூமியாகத் திகழ்ந்து வருகின்றது. சிறந்த இயற்கைத் துறைமுகம் இங்கு உள்ளது. சுருக்கமாகக் கூறுவதெனில் திருமலை தமிழீழத்தின் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த ஒரு பகுதியாகும்.

சிங்கள அரசு குடியேற்றங்கள் மூலம் எமது மண்ணைத் திட்டமிட்டு அபகரித்து வருகின்றது. இவ்வாறுதான் 1010 சதுர மைல் பரப்பளவு கொண்ட திருமலை மாவட்டத்தில் இருந்து 574 சதுர மைல்களைக் கொண்ட சேருவில சிங்களப் பகுதி உருவாக்கப்பட்டது இத்துடன் திருப்திப்படாது 90 யூன் யுத்தத்தைத் தொடர்ந்து காலங்காலமாக வாழ்ந்து வந்த தமிழ் மக்கள் மீது வன்முறை கட்டவிழ்த்து விடப்பட்டது. மக்கள் விரட்டியடிக்கப்பட்டார்கள். கால் நடையாகப் பல மைல் தூரத்தைக் கடந்து பல்லாயிரம் குடும்பங்கள் வடதமிழீழத்தில் பல முகாம்களிலும் வீடுகளிலும் தஞ்சமடைந்தனர்.

சொந்த மண்ணில் மக்கள் அகதிகளாக்கப் பட்டார்கள். உயிர் வாழும் உரிமை கூட மறுக்கப்பட்டது. மக்களின் பொருளாதார வாழ்வு சீரழிக்கப்பட்டது. குழந்தைகளின் கல்வி வாய்ப்புகள் முழுமையாகப் புறக்கணிக்கப்பட்டன. சுகாதாரச் சீர்கேடுகளாலும் தொற்று நோய்களாலும் மக்கள் தீவிரமாகப் பாதிக்கப்பட்டார்கள். குழந்தைகள் மத்தியில் மரண வீதம் என்றுமில்லாதவாறு அதிகரித்தது.

வளமான நிலங்களுக்கு சொந்தமானவர்கள் ஒரு வேளை உணவுக்கே திண்டாடினார்கள். நம்பிக்கையீனமும் விரக்தியும் வேதனையும் நிறைந்த முகாம் வாழ்வில் நாட்களை கழித்தார்கள் சிங்கள அரசு விரும்பியதும் இதைத்தான்.

## மண்ணில் உறுதியாக கால் பதித்து நிற்கின்றார்கள்

இழப்புக்களால் இந்த மக்கள் சோர்வடைந்து மண்ணை விட்டு ஓடவில்லை. அகதி முகாம்களில் சீரான உணவு, உடை, உறையுள் வசதிகளின்றி வாழ்வின் எந்த அடிப்படைத் தேவைகளையும் பூர்த்தி செய்ய முடியாதவர்களாக இருந்தார்கள்.

எதிரியின் திட்டங்களைத் தகர்த்தெறிந்து இந்த மக்களுக்கென்று ஒரு பொருளாதார அடித்தளத்தை உருவாக்கவும் வாழ்வின் அத்தியாவசியமான அடிப்படைத் தேவைகளை உறுதிப்படுத்தவும் ஒரு சமூக பொருளாதார வளர்ச்சித் திட்டம் விடுதலைப் புலிகளின் திருமலை மாவட்டத் தொடர்பகத்தால் வெற்றிகரமாக நெறிப்படுத்தப்பட்டு வருகின்றது.

## வேலைத் திட்டம்

1991 தை மாதத்தில் இந்த மக்களுக்கான சமூகப் பொருளாதார வேலைத் திட்டம் திருமலை மாவட்டத் தொடர்பகத்தால் ஆரம்பிக்கப்பட்டது. வட தமிழீழத்தில் செயற்படும் அரச சார்பற்ற நிறுவனங்களும் தமது ஒத்துழைப்பை நல்கியிருந்தன இந்த வேலைத் திட்டம் வீடமைப்பு, கல்வி, சுகாதாரம், புனர்வாழ்வு, சுயதொழில், விவசாயம் பொதுவிடயம் என ஏழு பிரதான பிரிவுகளில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

உண்மையில் முகாம்களில் தங்கி இருந்த நாட்களில் இந்தக் குழந்தைகள் தமது பாடசாலைப் படிப்பை கைவிட்டு இருந்தார்கள். முகாம்களுக்கே பொதுவான சுகாதார சீர்கேடும் போக்குவரத்து வசதியின்மையும் சேர்ந்து வைத்திய வசதிகளை இவர்களுக்கு கிடைக்காமல் செய்தன.

வசிப்பதற்கு இடமில்லை சீவியத்திற்கு தொழிலில்லை. கையில் பணமுமில்லை அரைப் பட்டினியாலும் போசாக்கின்மையாலும் வாடினார்கள்.

துணைவனை இழந்த பெண்கள், பெற்றோரைப் பிரிந்து தவிக்கும் குழந்தைகள் முதியோர்கள் நோயாளிகள் ஆகியோரின் நிலை வார்த்தைகளால் விளக்கக் கூடியதல்ல.

சமூகப் பொருளாதார வளர்ச்சித் திட்டம் ஆரம்பிக்கப்பட்டு ஓராண்டு கடக்கும் இன்றைய நிலையில் நிலைமை எதிர்பார்த்ததைவிட மிகவேகமாக சீரடைந்து வருகின்றது. தொடர்ந்து இத்திட்டத்தின் செயற்பாடுகளை நோக்குவோம்.

## வீடமைப்பு:

திட்டத்தின் முதற்கட்டமாக முகாம்களில் வாழ்ந்த மக்கள் தனித்தனிவீடுகளில் குடியமர்த்தப் பட்டார்கள். இன்றுவரை 2250ற்கும் மேற்பட்ட வீடுகள் யாழ்ப்பாணம், வன்னி பிராந்தியங்களில் நிறுவப்பட்டுள்ளன. இக் குடியிருப்புக்கள் மாவீரர் பெயர்களைக் கொண்டு அழைக்கப்படுகின்றன. குடியிருப்புக்கு வேண்டிய நன்னீர் மலசலகூட வசதிகள் உறுதிப்படுத்தப்பட்டு வருகின்றன.

## புனர்வாழ்வு நடவடிக்கைகள்:

முகாமில் சமைக்கப்பட்டு உணவு வழங்கப்பட்ட நிலை கைவிடப்பட்டது. ஒவ்வொரு குடும்பத்திற்கும் வேண்டிய உலர் உணவு வாரந்தோறும் வழங்கப்பட்டு வருகின்றது. இதை விட மீளக் குடியமர்தலுக்கான நிவாரணங்களும் உதவிகளும் வழங்கப்பட்டு வருகின்றன. கணவனை இழந்தோர்கள் கர்ப்பிணி, பாலூட்டும் தாய்மார்கள், முதியோர்கள், நோயாளர்கள், ஊனமுற்றோர்கள் தகுந்த முறையில் பராமரிக்கப்படுகின்றார்கள். அத்தியாவசியத் தேவைகள் பூர்த்தி செய்யப்

சமூக பொருளாதார வளர்ச்சித் திட்டப் பொறுப்பாளர் ரவியுடனான சந்திப்பிலிருந்து:.



படுகின்றன. இதில் பள்ளி முன்னிலைச் சிறார்களுக்கும், கர்ப்பிணி மற்றும் பாலூட்டும் தாய்மார்கட்கும் சத்துணவு தமிழர் புனர்வாழ்வு கழகத்தால் வழங்கப்படுவது குறிப்பிடத்தக்க ஒன்றாகும். இத்திட்டத்தால் எதிர்காலச்சந்ததியினரின் உடல் உள வளர்ச்சி உறுதிப் படுத்தப் படுகின்றது.

## குடியிருப்பில் கல்வி வசதிகள்:

மாணவர்களின் கல்வி நடவடிக்கைகளை நெறிப்படுத்த குடியிருப்புக்கள் தோறும் கல்வி வளர்ச்சிக் கழகங்கள் உருவாக்கப்பட்டு வருகின்றன. மாணவர்களுக்கான பாடசாலை உபகரணங்களும் சீருடையும் வழங்கப்பட்டு வருகின்றன. இத்தகைய திட்டங்களால் இன்று 2000ற்கும் மேற்பட்ட மாணவர்களின் கல்வி, சமூக மனப்பாங்குகள் மேம்படுத்தப் பட்டு வருகின்றன.

## மருத்துவ வசதி:

சிங்கள அரசின் திட்டமிட்ட புறக்கணிப்பிற்கு உள்ளான துறைகளில் மருத்துவத் துறையும் குறிப்பிடத்தக்க ஒன்றாகும். உருவாக்கப்படும் புதிய குடியிருப்புக்களிலும் மருத்துவ வசதிகள் பிரச்சினைக் குரியதாகவே இருந்து வந்தன. இவற்றை நிவர்த்தி செய்யும் பணியில் குடியிருப்பில் இருந்து 40ற்கும் மேற்பட்டவர்களுக்கு சுகாதாரப் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது அத்தியாவசிய மருந்துகள் வழங்கப்பட்டுள்ளன.

அடிபடைச் சுகாதாரம் உறுதிப்படுத்தப் பட்டுள்ளது குறிப்பாக மாவீரர் வைத்திய நிலையமும், அசோக் மருத்துவ நிலையமும் முல்லை மாவட்டத்தில் நிறுவப்பட்டுள்ளன. 24 மணி நேரமும் இயங்கும் இவை குறிப்பிடத்தக்க சேவையாற்றி வருகின்றன.

## அறிவாலயங்கள் :

மக்களின் நன்மை கருதி உருவாக்கப்பட்டுள்ள இந்த நிலையங்கள் சமூக அறிவை வளர்ப்பதில் பெரும் பங்காற்றி வருகின்றன சகல பத்திரிகைகளும் நூல்களும் வழங்கப்பட்டு வருகின்றன. அறிவாலயங்கள் ஒவ்வொன்றும் மாவீரர்களின் பெயர்களைத் தாங்கி நிற்கின்றன.

## தொழில் வாய்ப்புகள்:

குடியிருப்பில் உள்ளவர்களுக்குத் தொழில் வாய்ப்புகள் உறுதிப்படுத்தப் பட்டுள்ளன. பெண்களுக்கெனத் தையல் பயிற்சி நிலையம் நிறுவப்பட்டுள்ளது. இத் திட்டத்தால் பெண்களுக்குத் தொழில் வாய்ப்புக் கிடைக்கின்றது என்பது மட்டுமல்ல குடியிருப்பின் தேவைகளும் பூர்த்தி செய்யப்படுகின்றன. மேலும், சுயசார்புத் தொழிற் திட்டத்தின் கீழ் வியாபார முயற்சிகளை மேற்கொள்ளத் துவிச்சக்கர வண்டிகளும், வியாபார முயற்சிகளுக்காக மீளளிக்கப்படும் கடனுதவியும் விவசாய நடவடிக்கைகளுக்கான உதவியும், மீன்பிடித் தொழில், மரவேலை, கால்நடை வளர்ப்பு உட்பட பல்வேறு தொழில் துறைகளுக்கும் உதவிகள் வழங்கப்பட்டு வருகின்றன. இவ் வகையில் நெற்செய்கை மேட்டுப் பயிர்ச்செய்கை மற்றும் மக்கள் பண்ணைகள் மூலம் உற்பத்தி குறிப்பிடத்தக்க அளவு மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. மேலும் நியாய விலையில் பொருள்களைப் பெற்றுக் கொள்வதற்கு வசதியாக நியாய விலைக் கடைகள் அமைக்கப்பட்டுள்ளன.

சுருக்கமாக மக்களுக்கான பொருளாதார அடித்தளம் வெற்றிகரமாக இடப்பட்டுள்ளது. விவசாயத் திட்டங்கள் மூலம் மக்களின் அன்றாட வாழ்க்கை மேம்பட்டுள்ளது.

இவற்றைவிட குடியிருப்பில் விளையாட்டுக் கழகங்களும் உருவாக்கப்பட்டுள்ளன குடியிருப்பாளர்களின் உடல், உள ஆளுமையை, வளர்ச்சியை இந்தக் கழகங்கள் மேம்படுத்தி வருகின்றன.

கலைப் படைப்புக்களும் இங்கே வளர்ந்து வருகின்றன. இவ்வகையில் தென் தமிழீழ அவலங்களைச் சித்தரிக்கும் ''போராட்ட மேகங்கள்'' நாடகம் குறிப்பிடத்தக்க ஒன்றாகும்.

எதிரியின் திட்டங்கள் தோல்வி கண்டு விட்டன. வேதனை நிறைந்த முகாம் வாழ்வில் இருந்து மக்கள் புதிய குடியிருப்புக்களை நோக்கி வெற்றிகரமாக நகர்த்தப்பட்டு வருகின்றார்கள், அடிப்படை வசதிகள் எதுவுமின்றி முகாம்களிலும் தெருவிலும் நின்ற நிலை மாற்றியமைக்கப்பட்டு விட்டது. தேசத்தின் விடுதலைக்காக உறுதியோடு இறுதி வரை தாக்குப்பிடிக்கக் கூடிய ஒரு மாபெரும் குடியிருப்பு நிறுவப்பட்டு வருகின்றது.

இருந்தபோதும் இந்தப் பெரும் பணியை முழுமையாக்க வேண்டுமெனில் தமிழீழ மக்கள் ஒவ்வொருவரும் தமது பங்களிப்பை வழங்க வேண்டும். தொடர்ச்சியாக உழைக்க வேண்டும். உண்மையில் முழுமையான கடும் உழைப்பினால் மட்டுமே இன்றைய நாட்களின் நெருக்கடியை வெற்றி கொள்ள முடியும் என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும்.

# நிவாரணத்திற்காக வழங்கப்படும் மனித பாவனைக்கு ஒவ்வாத தானியம் (கவ்பி)

இடம் பெயர்ந்தோருக்கு இம்மாதம் நிவாரணத்துக்காக ப.நோ.கூ சங்கங்களினால் வழங்கப்படும் கவ்பி, தானியம், உழுந்து பழுதடைந்த நிலையில் பாவிப்பிற்கு அற்றதாக உள்ளது. நிவாரணம் பெறும் பொதுமக்களின் முறைப்பாட்டையடுத்து எமது சங்க உறுப்பினர் ப.நோ.கூ சங்கத்தில் இதுபற்றி விசாரித்தபொழுது அது கச்சேரியினால் வழங்கப்பட்டது. அதைத்தான் விநியோகம் செய்கின்றோம் என பதிலுரைத்தார்கள். இத்தானியத்தை நிறுத்தி அதற்கீடாக, மாவை வழங்குமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தற்போதைய நிலையில் உள்ளூரில் ஏராளமான உபஉணவுப் பொருள்கள் உற்பத்தியாவதால் உழுந்து, பயறு, கவ்பி என்பன உள்ளூர் சந்தையில் பொதுமக்கள் நியாயவிலையில் பெறக் கூடியதாக உள்ளது ஆகவே கவ்பி தானியத்துக்கு மாற்றாக அரிசி, சீனி, மா, ஆகியன வற்றின் பங்கீட்டை சிறிது கூட்டிக் கொடுத்தால் மக்களுக்கு நன்மை பயக்குமெனக் கருதுகின்றோம். பழுதடைந்த, தரக்குறைவான பொருள்களை நிவாரணத்திற்கு கொடுப்பதால் அகதிகளாக்கப்பட்ட எமது மக்கள் நோய்வாய்ப் படுகின்றார்கள் என்பதையும் வேதனையுடன் தங்கள் கவனத்திற்குக் கொண்டு வருகின்றோம்.

இவ்வாறு ஊர்காவற்றுறை துயர்துடைப்புச் சங்கத்தால் கடந்த 9-3-92 அன்று அரச அதிபருக்கு அனுப்பப்பட்ட கடிதத்தில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

# தமிழ்த் தேசியத் தளத்தில் பெரும் சிதைவை ஐ. தே. கட்சியே ஏற்படுத்தியது

கடந்த 16-03-1992 அன்று யாழ். பல்கலைக் கழக மறுமலாச்சிக் கழகத்தின் பன்னிரண்டாவது ஆண்டு நிறைவு தினமாகும். கைலாசபதி அரங்கம் பேராசிரியர்களாலும், விரிவுரையாளர்களாலும், மாணவர்களாலும் நிறைந்திருக்க பன்னிரண்டாவது ஆண்டு விழா நிகழ்வுகள் கழகத் தலைவர் சி. பாஸ்கரன் தலைமையில் இடம் பெற்றன.

பிரதம விருந்தினரான துணை வேந்தர் துரைராஜா அவர்கள் தனது உரையில் இன்று தமிழ் மக்கள் பொருளாதார ரீதியில் எதிர்நோக்கும் நெருக்கடிகளை எடுத்து விளக்கி, உள்ளூர் உற்பத்தியின் தேவையையும் இன்றியமையாமையையும் வலியுறுத்திக் கூறினார்.

நிகழ்வில் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்ட தமிழீழ விடுதலைப் புலிகளின் பிரமுகர் திரு. யோ. யோகி அவர்கள் போராட்டப் பாதையில் வன்னி, மன்னார் மக்களின் பங்கு பணியைப் பெரிதும் பாராட்டினார். உள்ளூர் உற்பத்தியின் பொருட்டு இவர்கள் செய்த தியாகங்களைப் பற்றியும் தனது உரையில் விதந்துரைத்தார்.

உள்நாட்டு, வெளிநாட்டு பரிமாணத்தில் இலங்கையின் இன்றைய அரசியல் நிலைவரம் என்ற விடயம் பற்றி திரு. மு. திருநாவுக்கரசு அவர்கள் உரையாற்றுகையில்,

## அரசியலும் வரலாறும்

அரசியலையும்' வரலாற்றையும் பொருளாதார அறிவின்றி எவராலுமே விளக்க முடியாது.

மேலும் ஒரு உள்நாட்டு அரசியல் நிலைமையைச் சர்வதேச அரசியல் அறிவின்றி எந்த வகையிலும் விளக்க முடியாது என்ற தனது கருத்துக்களை ஆணித்தரமாகக் கூறினார்.

## இன்றைய அரசியல் நிலைவரம்

இலங்கையின் இன்றைய அரசியல் நிலைவரம் பெருமளவிற்கு வெளிநாட்டுக் காரணிகளாலும், உள்நாட்டில் விடுதலைப் புலிகளின் போராட்டத்தினாலுமே நிர்ணயிக்கப் படுகின்றது. மேலும் விஞ்ஞான, தொழில் நுட்பத்துறைகளில் மனித குலம் மிகப் பெரிய வளர்ச்சியடைந்துள்ளது இவ் வளர்ச்சியினால் முழு உலகிற்கும் தேவையான பண்டங்களை உலகின் ஒரு சிறு பகுதி மக்களால் உற்பத்தி செய்தல் சாத்தியமாகி விட்டது. அமெரிக்காவும், யப்பானும், மேற்கைரோப்பிய நாடுகளும் உலகின் மொத்த உற்பத்திப் பண்டங்களில் அரைவாசிக்கும் மேற்பட்ட தொகையை உற்பத்தி செய்கின்றன. உண்மையில் இந்தப் பண்டங்களை விற்பனை செய்வதும், இந்தப் பண்டங்களை உற்பத்தி செய்வதற்கான மூலதனத்தைத் பெறுவதும் ஆகிய இரண்டும் தான் அரசியலாகும்.

உலகின் மூன்றில் ஒரு பங்கு மக்களைக் கூடக் கொண்டிராத இந்நாடுகள் விஞ்ஞான தொழில் நுட்பத் துறையில் அடைந்த பிரமிக்கத்தக்க வளர்ச்சியினால் உலகின் முழு மக்களுக்குமான உற்பத்திப் பொருள்களை வழங்கக் கூடிய நிலைமை அடைந்துள்ளன.

உலகின் ஏனைய பகுதிகளுக்குப் பண்டங்களை விற்பதன் மூலம் உலகின் முழுப் பகுதியையும் தமது பொருளாதாரக் கட்டுப்பாட்டின் கீழ் கைத்தொழில், விஞ்ஞான வளர்ச்சியடைந்த நாடுகள் கொண்டு வந்துள்ளன.

தமது பொருளாதாரத்தை உறுதிப்படுத்திக் கொள்ளவும், யுத்த தளபாடங்களை உற்பத்தி செய்யவும், அண்டவெளி ஆய்வுகளை மேற்கொள்ளவும் வேண்டிய பெருந்தொகை நிதியை இந்த மூன்றாம் உலக நாடுகளின் மீது செலுத்தப்படுகின்ற பொருளாதார ஆதிக்கத்தின் மூலமே பெற்றுக் கொள்கின்றன.

மேலும் அரசியல் என்பது நடைபெறக்கூடிய பல்வேறு நடத்தைகளையும் பற்றித் தீர்மானம் எடுகின்ற துறையாகும். அது பிரதானமாக பொருளாதார அடித்தளத்தைக் கொண்டது. உலகில் உள்ள அனைத்தும் அரசியலுக்கு கீழ்ப்பட்டவையேயாகும்.

இவ்வகையில் பெரும் விஞ்ஞானியில் இருந்து பாமரன் வரையாக அனைவரும் அரசியலுக்கு கட்டுப்பட்டவர்களாவர்.

## இலங்கையின் முக்கியத்துவம் அன்றும் இன்றும்

உலகில் கெடுபிடி யுத்தம் நடைபெற்று வந்த காலத்தில் இலங்கையின் அரசியல் முக்கியத்துவம் அசனுடைய அமைவிடம் காரணமான கேந்திர முக்கியத்துவத்தில் தங்கி இருந்தது. அதாவது கெடுபிடிப்போர் நடைபெற்று வந்த காலத்தில் இலங்கையின் அரசியல் முக்கியத்துவம் பொருளாதார ரீதியில் பெருமளவில் தங்கியிருக்கவில்லை. யுத்த தந்திரோபாய ரீதியிலேயே அதன் முக்கியத்துவம் அமைந்து இருந்தது ஆனால் இன்று கெடுபிடி யுததம்முடிவடைந்து விட்ட நிலையினாலும் நவீன கைத்தொழில் வளர்ச்சியினாலும் இலங்கையினுடைய கேந்திர முக்கியத்துவம் குறைந்து அமைவிடம் காரணமாக ஒரு வர்த்தக முக்கியத்துவத்தை வகிக்கின்றது.

அதாவது தென்னாசிய, தென்கிழக்காசியாவில் ஒரு உலக வர்த்தக மையமாக இலங்கையை மாற்றுவதற்கான வகையிலேயே இலங்கைக்கான வெளிநாட்டு முதலீடும், அரசியலும் அமைகின்றன. கெடுபிடி யுத்தம் நடைபெற்றுவந்த நாட்களில், சோவியத் யூனியனுடனான பகைமையின் காரணமாக, அமெரிக்காவும் மேலைத்தேசங்களும் அரசியல் ரீதியான முக்கியத்துவத்தை கொழும்புக்கு அளித்துவந்தன. இன்று நிலை மாறிவிட்டது.

## இனப்பிரச்சினையும் மேற்குலகமும்


இலங்கையின் இனப்பிரச்சினையானது எவ்வளவிற்கு சுமுக நிலை 'அடைகின்றதோ அவ்வளவிற்கு மேற்குலகின் நலன்களுக்கு இலகுவான சூழல் ஏற்படும். தீவில் அமைதி நிலவினால்தான் அவர்களுடைய நலன்களைப் பேணுதல் சாத்தியமாகும். எனவே இனப்பிரச்சினைக்கு ஒருசுமுகமான தீர்வைக்காண வேண்டிய நிர்ப்பந்தத்திற்குள்மேற்கு நாடுகள் தள்ளப்பட்டு உள்ளன. இதனால்தான் அவை முன்னொரு போதும் இல்லாதளவிற்கு இலங்கையின் இனப் பிரச்சினை பற்றி பேசுகின்றன. மேற்குலகம் தனது நலன்களுக்கேற்ற தீர்வுகளையே முன்வைக்கும், பிரேமதாசாவும் தனது நலன்களுகேற்ற தீர்வுகளையே முன்வைப்பார். இவ்வாறே ஏனைய அரசியல் கட்சிகளும் செயற்படும். ஆனால் முடிவில் இவை மக்களின் நலன்களை அந்தளவிற்குப் பேணுகின்றன என்பதிலேயே சுமுக நிலை ஏற்படுவது தங்கியிருக்கும்.

## குடும்ப அரசியல் ஆதிக்கம்

இலங்கையின்அரசியல் அரங்கில் குடும்ப அரசியல் ஆதிக்கம் பிரதான இடத்தை வகிக்கின்றதை சுட்டிக் காட்டிய மு திருநாவுக்கரசு அவர்கள் தொடர்கையில் முதன் முதலில் குடும்ப ஆதிக்கப்போட்டி டி. எஸ்.சேனநாயக்காவிற்கும் எஸ். டபிள்யு. ஆர். டி. பண்டாரநாயக்காவிற்கும் இடையிலான மோதலின் போதே வெளிப்பட்டது.

குடும்ப ஆதிக்கம்அரசியலில் பிரதானஇடத்தை வகிக்கின்ற போது இனப்பிரச்சினை பிறிதொரு கோணத்தில் குடும்ப ஆதிக்கத்திற்குரிய தளமாகப் பயன்படுத்தப்படலாயிற்று. அதாவது டி. எஸ். சேனநாயக்கா, எஸ். டபிள்யு. ஆர். டி. பண்டாரநாயக்கா மோதலில் இருந்து உருவாகிய இரு கட்சிகளும் தமது மோதல்களில் பயன்படுத்துவதற்கு இனவாதத்தையே அடிப்படையாகக் கொண்டார்கள்.

தொடர்ந்து ஐ தே.கவிற்கு உள்ளேயே டட்லி சேனநாயக்கா - சேர். ஜோன். கொத்தலாவல போட்டி முதல் இன்று பிரேமதாசா லலித்அத்துலத் முதலி, காமினி திசநாயக்கா வரை தொடரும் அரசியல் போட்டிகளையும் எடுத்துக் காட்டினார்.



மு.திருநாவுக்கரசு அவர்கள் உரையாற்றுவதையும் அருகில் தமிழீழ விடுதலைப்புலிகள் பிரமுகர் யோகி அவர்கள் அமர்ந்திருப்பதையும் படத்தில் காணலாம்.

மேலும் இன்று ஐ தே கட்சியில் இருந்து உருவான லலித்-காமினியின கட்சியின் அரசியல் எதிர்காலம் பற்றி மு.திருநாவுக்கரசு குறிப்பிடுகையில் தமிழ்நாட்டில் தி. மு. க. வில் இருந்து உருவான அ தி.மு க ஆட்சியை கைபபற்றியது போன்றே லலித் - காமினி கட்சிக்கும் ஆட்சியை அமைக்க ஓரளவு வாய்ப்புள்ளது என குறிப்பிட்டார்.

## பிரேமதாசா ஜனாதிபதி தேர்தலில் வெற்றிபெற வேண்டுமானால்...

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலைப் பொறுத்தவரை அரசியல் அரங்கில் ஒரு புறம் பிரேமதாசாவின் எதிரிகள் பெரும் சமூகப் பின்னணி கொண்டவர்கள்.

மறுபுறம் ஐ தே. கட்சி எப்போதும் பொதுத்தேர்தல்களில் ஏறத்தாழ 40 தொடக்கம் 45 சதவீத வாக்குகளையே பெற்றுவருகின்றன. ஆனால் இன்று ஐ. தே. கட்சி பிளவடைந்துள்ளது எனவே இந்த வாக்குகளும் பிரிந்து செல்லலாம்.இந்த நிலையில் முதலாவது சுற்று வாக்கெடுப்பில் ஜனாதிபதியாக வரும் வாய்ப்பை ஐ.தே.கட்சி இழக்கும் சாத்தியமே பெருமளவில் நிலவுகிறது.

இந் நிலையில் மலையக மக்கள் மூஸ்லிம் மக்கள், வட கிழக்கு தமிழர்கள் ஆகியோரின் வாக்குகளே வெற்றியை தீர்மானிக்கும். ஆகவே ஒருவர் ஜனாதிபதியாக வர விரும்பின் குறிப்பாக பிரேமதாசாவை பொறுத்தவரை மலையக. வாக்குகள் பெருமளவில் அவருக்கே சேரும்.

இந் நிலையில் அவர் திரும்பவும் ஜனாதிபதியாக வர விரும்பினால் வடக்கு-கிழக்கு மக்களை அரவணைத்தேயாக வேண்டிய நிலையிலேயே அவர் இருக்கின்றரர்.

இராணுவத்தின் வளர்ச்சி பற்றி குறிப்பிடுகையில் இனப் பிரச்சினைக்கு சுமுகமான தீர்வு காணப்படாத வரையில் இராணுவம் வளர்ந்தே செல்லும் எனவும் இலங்கை போன்ற சிறிய நாடுகளில் இராணுவம் பெருவளர்ச்சி பெறுமாயின் அரசியலில் அதன் கரம் ஓங்கும். ஈற்றில் அரசியலை நிர்ணயிக்கக் கூடியதாக இராணுவம் மாறிவிடும் என்றும் அவர் எச்சரித்தார்.

## தமிழ் தேசியவாதம் எதிர் நோக்கும் நெருக்கடி . . .

தென்கிழக்காசிய நாடுகளைப் பொறுத்து வர்த்தக மையமாக கொழும்பு மாறிவரும் நிலையானது தமிழ்தேசிய வாதத்தை பொறுத்தளவில் பெரும் நெருக்கடிகளை ஏற்படுத்தும் என்பதை வலியுறுத்தினார்.

அதாவது உற்பத்திச் சக்திகளெல்லாம் கொழும்பை மையமாகக் கொண்டு கூடும் பொழுது வட கிழக்கின் தமிழர்களும் கொழும்பை நோக்கி ஈர்க்கப்படுவர். பொதுவாக வெளிநாடுகளின் பிரதான உற்பத்தி மையமாக கொழும்பு மாறிவருகிறது. அவர்களுடைய பொருளாதார உறவுகள் கொழும்பையே மையமாகக் கொண்டுள்ளன.மேலும் அரசுடைமைகள் வேகமாக தனியார் மயப்படுத்தப்பட்டு வருகின்றன. இந்நிலையில் முன்னெப்போதும் இல்லாதவகையில் திறமைசாலிகளின் உழைப்பு கொழும்பிற்கு தேவைப்படுகின்றது. இந்நிலையில் தமிழர்கள் மத்தியில் உள்ள மூளைசாலிகள் பெருமளவில் கொழும்பை நோக்கி ஓடும் நிலை உள்ளதையும் அவர் எடுத்துக் காட்டினார்.

மேலும் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் ஆட்சிக் காலத்தில் அவர்கள் எமது மொழி உரிமையைப் பறித்தார்கள். அரசியலமைப்புத் திட்டரீதியாக வெளிப்படையாக தமிழர்களின் உரிமைகளைப் பறிந்தார்கள். தமிழ் மக்கள் மத்தியில் இந்நிழ்வுகள் தேசியவாத உணர்வைத் தூண்டி விட்டன. தமிழ் தேசியவாதம் பெருவளர்ச்சி பெற்றது.

ஆனால் ஐ. தே. கட்சியின் பொருளாதாரக் கொள்கையின் கீழ் கொழும்பை நோக்கி ஓடும் ஆபத்து ஏற்பட்டுள்ளது. எமது பிரதேசத்தின் அபிவிருத்தி அற்றுப்போய்விடுகின்றது. திறமைசாலிகளுக்கான தொழில் வாய்ப்புக்கள் கொழும்பில்மென் மேலும் அதிகரித்து வருகின்றன. ஒ-டு மொத்தமாக இந்நிலை எமது தேசியக் கட்டுமானத்தை நெகிழ்த்துகின்றது. தமிழ்த்தேசியவாதத்தைப் பொறுத்து பெரும் பாதிப்பை ஏற்படுத்தி வருகின்றதென்பதையும் அவர் தமதுரையில் எடுத்துக்கூறினார்.

தொடர்ந்து தமிழ்துறைத் தலைவர் கலாநிதி இ. பாலசுந்தரம் அவர்களின் வாழ்த்துரையுடனும், கலைநிகழ்வுகளுடனும் விழாநிறைவுபெற்றது.

- தொகுப்பு
**பிறேம்**

---

## செய்தியைத் தொடரும் சிந்தனைத் துளிகள்

O பயங்கரவாதத்தை(விடுதலைப் போராட்டங்களை) ஒழிக்க இஸ்ரவேலின் உதவியை இந்தியா நாடும்.
-இந்திய பாதுகாப்பு அமைச்சர்.

★ காந்தீயத்துக்கு சமாதிகட்டப்படும் என்ற பகிரங்க அறிவித்தலை இந்தியா விரைவில் வெளியிட்டாலும் ஆச்சரியப் படுவதறகில்லை.

O குப்பைக்கூடைக்குள் கைக்குண்டுகள் கண்டெடுக்கப்பட்டன
-இந்தியச் செய்தி

★ குப்பைக்குள் ''குண்டு'' மணி!

O வவுனியாவில் முன்னேற முயன்ற இராணுவம் புலிகளை காணாததால், மீண்டும் முகாம் திரும்பியது
-ஈழநாதம் செய்தி

★ புலிகளைக் கண்டாற்பயம்; காணாவிட்டால் அதைவிடப் பெரும்பயமோ!

O இலங்கைக்குத் திரும்பிச் செல்ல விரும்பும் அகதிகளை மட்டுமே அங்கு திருப்பி அனுப்ப வேண்டும்.
-இந்திய உள்துறை அமைச்சர்

★ அப்படியான விருப்பத்தை அகதிகளிடம் எப்படி ஏற்படுத்த வேண்டும் என்பது சம்பந்தமான ஆலோசனைகளையும் அவர் இரகசியமாக அறிவித்திருப்பாரோ

-அம்புலி

# உதயபுரம் (ஒரு கிராமத்தின் கதை)

உதயபுரக்கிராமமானது அரியாலை தென்கிழக்கில் J.89 கிராமசேவகர் பிரிவில் அடங்கி உள்ளது. இக்கிராமமானது கிழக்கே பூம்புகார் கிராமத்தையும், மேற்கே மணிப்புரி கிராமத்தையும், வடக்கே நாவலடிக் கிராமத்தையும், தெற்கே கடல்பரப்பினையும் தனது எல்லைகளாகக் கொண்டு 7 ஏக்கர் நிலப்பரப்பில் 206 குடும்பங்களை கொண்டு அமைந்த ஓர் அழகிய கிராமமாகும்.

இக்கிராமத்து மக்களின் சோக வரலாற்றினை பார்ப்போம். இங்கு வாழ்கின்ற மக்களில் அநேகமானோர் சொந்த மண்ணிலேயே ஒரு குழி நிலத்தைக்கூட தமக்கு சொந்தமாக பெற்றுக் கொள்ளாது நாடோடியாக அங்கும் இங்கும் அலைந்து - இறுதியில் இந்த உதயபுரமாவது தமது வாழ்விற்கு ஒரு நிரந்தர அமைவிடமாக அமையாதா என்ற ஒரு ஏக்க பெருமூச்சுடன் வாழ்கின்றார்கள். இங்கு வாழும் மக்களில் பெரும்பாலானோர் கடல்தொழிலையே தமது தொழிலாக கொண்டு வாழ்ந்து வருகின்றார்கள். இவர்களின் பிரதான தொழில் கடல்தொழில் ஆகையினால் ஆரம்பகாலத்தில் இம்மக்கள் தமது தொழிலுக்கு ஏற்றஇடமாக குருநகர், பாசையூர் போன்ற கடற்கரை பகுதிகளில் வாழ்ந்து வந்தனர். சிறிலங்கா அரசின் அடாவடித்தனங்களுக்கும், அடக்கு முறைகளுக்கும் உட்பட்டு பலஉயிர் இழப்புக்களையும், உடைமைகளையும் இழந்து சொந்த மண்ணிலேயே அகதிகளாகி அல்லலுற்றனர். அயல் கிராமமான மணிப்புரி புதுக்குடியேற்றமாக வளர்ந்து வந்த வேளையில் தற்போது உள்ள இவ் உதயபுரக்கிராம நிலமானது பற்றைக்காடுகளாக தனியாருக்கு சொந்தமான நிலப்பரப்பாக சிறு,சிறு பற்றைகளுடன் இருந்தது. இந் நிலப்பரப்பினை சீர்திருத்தி 1985 ஆம் ஆண்டு மக்கள் குடியேறினர். இம்மண்ணில் குடியேறிய மக்கள் சிறு, சிறு குடிசைகளை அமைத்து மொத்தம் 206 குடும்பத்தினர் குடியேறினர். சிறிய நிலப்பரப்பினை கொண்ட இக்கிராமம் 206 குடும்பங்களை தன்னகத்தே கொண்டதால் அங்கு உருப்பெற்ற குடியிருப்புக்களின் நிலப்பரப்பின் அளவும் சிறியதாகவே அமைந்தது. காலத்தின் கோலத்தால் இச்சிறிய நிலப்பரப்பில் எந்த ஒரு அடிப்படைவசதிகளும் இன்றி மிகவும் நெருக்கமாக வாழ்கின்றனர். இன்று வரையில் இம்மக்களின் அவலமான வாழ்க்கையை யாருமே கண்டுகொண்டதாக தெரியவில்லை. இக்கிராமத்திற்குச் சென்று பார்த்தால் தெரியும் இங்கு வாழ்கின்ற மக்கள் எப்படியான ஒரு அவலமான வாழ்க்கையை வாழ்கின்றார்கள் என்று

இந் நிலப்பரப்பில் ஒரு சிறிய குடிசையை தவிர ஒரு சாதாரண குடும்பத்திற்கு உரிய ஆகக் குறைந்த அடிப்படை வசதிகளான கிணறோ அன்றி மலசலகூடமோ கட்டமுடியாத அளவிற்கு சிறிதாக உள்ளது. இம்மக்களின் நிலப்பரப்பு குறைபாடு ஒருபுறம் இருக்க இக்கிராமத்து மக்களுக்கு சரியான ஓர் போக்குவரத்துப்பாதை இல்லை. இம்மக்கள் கடற்கரையோரப் பகுதியினையே தமது பிரதான பாதையாக பாவித்து வருகின்றனர். இப்பாதையானது மணற் பாங்கானது. இப்பாதையை பெரும் சிரமத்துடன் கோடைகாலங்களில் பாவித்து வருகின்றார்கள். எனினும் மாரிகாலத்தில் இப்பாதையானது கடல்நீரால் சூழப்பட்டு போக்குவரத்துச் செய்யமுடியாத அளவிற்கு மாறிவிடும். இவ்வாறு மக்கள் அனுபவிக்கும் துன்பத்தை சொல்லில் வர்ணிக்க முடியாது. இக்கிராமத்தில் நடந்த ஓர் உண்மை நிகழ்வு இது. ஓர் மாரிகாலத்தில் இக்கிராமத்தில் ஒரு பெண்ணுக்கு கடுமையான காய்ச்சல் கிராமத்தில் எதுவித வைத்திய வசதியுமில்லை. இப்பெண்ணை வைத்தியசாலைக்கு கொண்டுசெல்ல முற்பட்டவேளை இவர்களது பிரதானபாதை மழைவெள்ளத்தினாலும் கடல்நீரினாலும் சூழப்பட்டு போக்குவரத்துக்கு தடைப்பட்டு இருந்தது. இந் நிலையில் வள்ளத்தில் ஏற்றி கடல்வழிப்பாதையாக இப்பெண்ணை எடுத்துச் சென்றவேளை கடுங்குளிரினாலும் போதிய வைத்திய சிகிச்சையும் இன்றி இப்பெண் கடல் நீரினால் நனைக்கப்பட்டு கொழும்புத்துறை துறைமுகத்தைஅடையும்சமயம் மரணித்தாள். இவர்கள் மனித வாழ்வுக்கு அத்தியாவசியமாக வேண்டிய அடிப்படைவசதிகளான மருத்துவம், கல்வி, தொழில், போக்குவரத்து, உணவு, உடை, உறையுள் போன்ற வசதிகள் இன்றி வாழ்ந்து வருகின்றார்கள்.

இக்கிராமத்தில் மொத்தம் 206 வீடுகள் இருக்கின்றன, இவற்றில் 5 வீடுகளில் மாத்திரமே மலசல கூடம் கட்டப்பட்டிருக்கின்றது. மிகுதி 201 வீடுகளில் வாழ்பவர்கள் கடற்கரையோரங்களையும், பாதையோரங்களையும் குடிகள் இல்லாத நிலங்களையும் தமது கழிவிடங்களாகப் பயன்படுத்தி வருகின்றார்கள். இச்சுகாதாரக் கேட்டினால் இங்குள்ள அநேகமான பிள்ளைகள் சொறி, சிரங்கு, வயிற்றுளைவு போன்ற நோய்களினால் அடிக்கடி பீடிக்கப்பட்டு வருகிறார்கள். வெளியான இடங்களில் மலசலம் கழிப்பது தீமை என்பது தெரிந்தும் இம்மக்கள் தமது வீடுகளில் மலசல கூடத்தை அமைக்க முடியாத அளவிற்கு அவர்களின் குடியிருப்பு நிலமானது சிறிதாக உள்ளது. இவர்களின் இக்குடியிருப்பு நிலத்தின் அளவு கூட்டப்படாத வரைக்கும் இவர்களின் இப்பிரச்சினையைத் தீர்க்க முடியாது — அல்லது பொது மலசல கூடங்கள் நிறுவப்பட வேண்டும்.

அடுத்து இவர்களுக்குள்ள முக்கிய பிரச்சினை கல்வி. இங்கு வாழும் சிறார்கள் 12 வயதில் கூட ஆரம்பக் கல்வியைப் பெறாத நிலையில் இருப்பதைக் காணக்கூடியதாக இருக்கின்றது. கல்வி அறிவின்மை இங்குவாழும் சிறார்கள் மத்தியில் மட்டுமன்றி, இங்கு வாழும் பெரும்பான்மையான மக்களிடமும் காணப்படுகின்றது. இவ் அறிவின்மையால் இங்கு வாழும் மக்களிடையே சமூகச் சீரழிவுகள் பெருமளவு இருப்பதை அவதானிக்கக் கூடியதாக இருக்கின்றது. இங்கு வாழும் இளம் சமுதாயத்தினரிடையே தீய பழக்கவழக்கங்கள், சிறு வயதுத் திருமணங்கள், குடிப் பழக்கங்கள், களவு, சண்டை, சுகாதார பழக்கவழக்கமின்மை போன்ற சமூகச் சீரழிவுகள் காணப்படுகின்றது. இங்கு ஓரளவு படித்தவர்கள் விரல்விட்டு எண்ணுமளவிற்கு உள்ளார்கள். இக் கல்வி அறிவின்மையால் இவர்களை வெளியில் இருந்து வருபவர்கள் இலகுவில் ஏமாற்றிச் செல்கின்றார்கள். இவர்களுக்கு அடிப்படைக் கல்வி அறிவின்மையால் பல்வேறு வழிகளிலும் பாதிப்புக்குள்ளாகி வருகின்றார்கள். இந்தியாவில் சேரிப்பகுதி என்று கூறப்படுவது போன்று தமிழீழத்தில் இக்கிராமமோர் சேரிப்பகுதி ஆகும். குடிகள் நெருக்கமாகவும் குடிநெருக்கத்தினால் சுற்றாடல் அசுத்தமாகவும் காணப்படுகின்றது.

கடற்கரையை அண்டிய பிரதேசம் ஆகையால் மழைகாலத்தில் கடல்நீர் இவர்களதுகுடியிருப்பை ஆக்கிரமித்து விடும் இவ்வேளையில் இம் மக்கள் சாக்கு, மட்டை போன்ற பொருள்களை பயன்படுத்தி பரண் அமைத்து அதன் மேல் படுத்து தூங்குவதை காணலாம். ஒரு நேரம் உண்ணுவதற்கு வழியில்லாத இம்மக்களுக்கு மழைகாலத்தில் தூங்குவதற்கு கூட இவ் இயற்கை வழிவிடுவதில்லை. கடல்நீர், சுரப்பதனால்இப்பிரதேசத்தில் அமைந்துள்ள வீடுகள் கசிந்த வண்ணமே இருக்கும். நிலக்கசிவினால் மண்ணில் உள்ள கிருமிகள் இவர்களது கால்களை அரித்துநோயாளர்களாகஆக்கி விடுகின்றது. இதுமட்டுமன்றி குடிநெருக்கடிகளினாலும் மலசலகூட வசதியின்மையாலும், சுற்றாடல் துப்பரவின்மையாலும், கல்வி அறிவின்மையாலும் இம்மக்கள் பல்வேறு நோய்களுக்கு உள்ளாகி விடுகின்றார்கள். சென்ற வருட மாரிக்காலத்தில் மலேரியா காய்ச்சல் நோயினால் 90ற்கும் அதிகமானோர் பாதிக்கப்பட்டுள்ளனர். சாதாரண ஒருசிறு காய்ச்சலுக்குக்கூட இவர்கள் யாழ் மருத்துவமனைக்கு செல்ல வேண்டிய நிலையில் உள்ளார்கள்.

அடுத்து இங்கு வீடு என்ற அமைப்பில் இருப்பது 3வீடுகள் மாத்திரமே மிகுதியான வீடுகள் அனைத்தும் வானம் பார்த்த பூமிபோன்று நிலத்தில் இருந்து பார்த்தால் வானம்தெரியுமளவிற்கு நீண்டகாலமாக வேயப்படாத நிலையில் சீரழிந்து உள்ளது.

கடல்தொழிலையே தமது தொழிலாக கொண்டுள்ள இம் மக்கள் இராணுவ நடவடிக்கைகளால் கடல்தொழில் செய்ய முடியாத அளவிற்கு தொழில் பாதிக்கப்பட்டுள்ளதால் வாழ்க்கையும் பாதிக்கப்பட்டு நிற்கின்றார்கள். அன்று இருப்பிடம் தேடி அலைந்த மக்கள் இன்று ஒரு நேரம் உண்பதற்கு உணவு கிடைக்குமா எனஏங்கி தவித்துக் கொண்டிருக்கிறார்கள். இவர்கள் கடல் தொழிலையே பிரதானதொழிலாக கொண்டதனால் வேறு தொழில் செய்ய முடியாத நிலையில் தவித்துக் கொண்டிருக்கின்றார்கள். இவர்களின் இந்நிலையினால் சில வேளைகளில் அனேகமான வீடுகளில் ஒருநாள் பூராவாகவும்பட்டினி அவர்களை வாட்டிவதைப்பது அவர்களுக்குத்தான் தெரியும். இப்படியான ஒரு அவலவாழ்க்கையை வாழும்மக்கள் தமது பிரச்சினையை தமக்குத் தெரிந்த உத்தியோகஸ்தர்களிடம் எடுத்துக்கூறி இருந்த போதும், இக்கிராமத்தின் மீது யாருமே அக்கறை கொண்டதாக இதுவரை தெரியவில்லை.

தற்போது இம்மக்களது பிரச்சினை விடுதலைப்புலிகள் மகளிர் முன்னணியினரின் கவனத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டு கிராமப் பொருளாதார வளர்ச்சித் திட்டப்பிரிவினர் பூம்புகாருக்கு அடுத்த கிராமமாகஇவ் உதயபுரக் கிராமத்தினை தெரிவுசெய்து தமது வேலைத்திட்டத்தினை திட்டமிட்டுசெயல்படுத்த உள்ளார்கள். இக்கிராமத்தில் முதல் கட்டமாகசுற்றாடல் துப்புரவு செய்யும் வேலை நடைபெற்றது இந்நிகழ்வில் இவ் ஊர் மக்கள் சுற்றாடலில் தூய்மையின் அவசியத்தை உணர்ந்து செயல்பட்டுள்ளார்கள். அடுத்த கட்டமாக கல்வியின் அவசியத்தை உணர்ந்து ஓர் சிறுவர் பாடசாலையை உருவாக்கி நடாத்திவருகின்றார்கள் இங்கு மொத்தம் 46 மாணவர்கள் கல்வி பயிலுகின்றார்கள். இவர்களின் 10ற்கும் மேற்பட்டவயதையுடையவர்கள் 15 பேர் உள்ளார்கள் மிகுதிப் பிள்ளைகள் பாடசாலைக்குச் செல்லாமல் வீதிகளிலும் கடற்தொழிலிலும் ஈடுபடுத்தப்படுவதனை காணக்கூடியதாய் உள்ளது. இந்நிலைமைக்கு காரணம் பெற்றோர்களின் கல்வி அறிவின்மையும் அக்கறையின்மையுமேயாகும் சிறுவர்களின் போசாக்கு குறைவினை கருத்தில் கொண்டு போசாக்கு வழங்கும் நடைமுறையை இச்சிறுவர் பாடசாலை ஊடாகச் செயல்படுத்தி வருகின்றார்கள். அத்துடன் மக்களின் முயற்சியினால் ஓர் சனசமூக நிலையமும் உருவாக்கப்பட்டு உள்ளது.

· மிதிலா

## தென் தமிழீழத்தில்...

### அம்பாறை மாவட்டத்தில்

- ★ 29 விசேட அதிரடிப்படை முகாம்கள் உள்ளன.
- ★ 07 இராணுவ முகாம்கள் உள்ளன.
- ★ 22 ஊர்காவற்படை முகாம்கள் உள்ளன.
- ★ 09 காவல் துறை நிலையங்கள் உள்ளன.
- ★ 34 குடிபெயர்ந்த கிராமங்கள் உள்ளன.

### திருகோணமலை மாவட்டத்தில்

- ★ 121 இராணுவ முகாம்கள் உள்ளன.
- ★ 50 காவல்துறை நிலையங்கள் உள்ளன.
- ★ 22 இடம் பெயர்ந்ததின் பிற்பாடு குடியேற்றப்படாத கிராமங்கள் உள்ளன.
- ★ 12 முகாம்களில் 17,916 அங்கத்தவர்களை கொண்ட 4997 குடும்பங்கள் உள்ளன.

## அன்னை பூபதி.

நாயகியை நினைவு கொள்ளுவோம். இந்த மண்ணிற்காகத் தன்னை இழந்த அந்தத் தாயை மனதிற் கொள்ளுவோம்.

புதிது புதிதாகப் பிறந்து வரும் எங்கள் புதிய தலைமுறைக்குள் பூபதி அம்மாவின் தனக்கென வாழாத தியாகத்தைச் சொல்லி வைப்போம். அந்நிய சக்திகள் எங்கள் மண்ணுக்குள் புகுந்தால் என்னவாகும் என்பதை மீண்டும் மீண்டும் இரை மீட்டிப்பார்ப்போம். பூபதி அம்மாவின் நினைவு நாட்களைக் கொண்டாடுவது நன்றிக்கடனுக்காக அல்ல. அந்த நாட்களை நினைவு கூர்ந்து அடுத்த நாட்களைச் சமூகப் பணிக்கான போராட்டத்தை முன்னெடுப்பதற்காகவே இவ்வாறு தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியற் பிரிவின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## முத்தமிழ் விழா 1992

விடுதலைப் புலிகள் கலை பண்பாட்டுக் கழகத்தினர், சென்ற வருடம் ஜூன் மாதத்தில் நடாத்தியது போன்று இவ்வருடமும் மிகவும் கோலாகலமாக தமிழீழ மண்ணில் முத்தமிழ் விழாவினை நடாத்துவதற்குரிய ஆயத்தங்களை மேற்கொண்டு வருகின்றனர்.

சென்ற வாரம் விடுதலைப் புலிகள் கலை, பண்பாட்டுக் கழகத் தலைமைச் செயலகத்தில் அமைந்துள்ள கேட்போர் கூடத்தில் இதற்கான ஆரம்பக் கூட்டம் இடம்பெற்ற போது; விழாவை சென்ற வருடத்தைவிட மிகவும் சிறப்பாகவும், எழுச்சியாகவும் கொண்டாடுவதன் பொருட்டு விழாக் குழுக்களும் தெரிவு செய்யப்பட்டுள்ளன.

தொடர்ந்து தமிழீழத்தின் பல பாகங்களிலும் பத்து நாட்கள் இடம்பெறவிருக்கும் இவ் விழாவின் பட்டிமன்றங்கள், கவியரங்குகள், நடன நிகழ்வுகள், நாட்டிய நாடகங்கள், வில்லுப்பாட்டு, தமிழர்களின் பாரம்பரியக் கூத்து வடிவங்கள், நாடகங்கள் என பல சிறப்பு நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன.

முத்தமிழ் விழாவில் பங்கேற்கவிரும்பும் கலைஞர்கள் தங்கள் ஆக்கங்களின்எழுத்துப் பிரதிகளை 30-03-92கு முன்பாக 'முத்தமிழ் விழாப் பொறுப்பாளர், தலைமைச் செயலகம் விடுதலைப்புலிகள் கலை, பண்பாட்டுக்கழகம், கோண்டாவில்' என்ற முகவரிக்கு அனுப்பிவைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றார்கள். இவ்வாறு கலை, பண்பாட்டுக்கழகத்தினால் வெளியிடப்பட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

## உண்மை

எமது படையணி கடக்கவேண்டியது நெருப்பாறென்பது எமக்குத் தெரியும்! ஆனால்... அதைத் தாங்கக் கூடிய மக்கள் ஆதரவென்னும் கவசம் எம்மிடம் உண்டு!

தலைவர் வே.பிரபாகரன்.


# விழிப்பு

புகையிரத நிலைய வீதி,
கோண்டாவில் மேற்கு,
கோண்டாவில்.


## அகதி முகாம்களும் அவலங்களும்

எமது மண்ணில் எழுச்சியடைந்து வரும் தேசிய விடுதலைப் போராட்டத்தை அழித்தொழித்து விட எதிரி தன்னாலான அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொண்டு வருகின்றான்

இராணுவ அடக்குமுறையை மக்கள் மீது கண் மூடித்தனமாக ஏவிவிட்டு குடியிருப்புகளை விட்டு மக்களை விரட்டியடித்து வருகின்றான். இந்த நடவடிக்கைகள் மூலம் உளவியல் அடிப்படையில் மக்களை அச்சுறுத்தி மக்களுக்கும் போராளிகளுக்கும் இடையில் இடைவெளியை உண்டாக்கி, தேசிய விடுதலைப் போராட்டத்தை சிதைத்து அழித்து விட முனைந்து நிற்கின்றான்.

இராணுவ நடவடிக்கை காரணமாகத் தமது சொந்த வாழிடங்களை விட்டு வெளியேற்றப்பட்ட மக்கள் இன்று முகாம்களில் வாடுகின்றனர். எவ்வித உழைப்புமின்றி, நிவாரணத்தை நம்பி நாட்களைக் கடத்துகின்றனர். முகாம்களுக்கே உரிய சன நெருக்கடியும், சுகாதாரச் சீர்கேடுகளும், பிரச்சினைகளும் சேர்ந்து நிலைமையை மோசமாக்கி வருகின்றன.

இதைவிட அண்மையில் முகாமில் ஏற்பட்ட தீ விபத்தும் உயிர், உடைமை இழப்புகளை ஏற்படுத்தியமை தெரிந்ததே. எமது எதிரி விரும்புவதும் இதைத்தான்.

எமது மக்கள் முகாம்களில் முடங்கிக் கிடக்க நிர்ப்பந்திக்கும் சிங்கள அரசு மிக வேகமாக எல்லைப் புறங்களை சிங்களக் குடியேற்றங்கள் மூலம் அபகரித்து வருகின்றது.

உண்மையில் முகாம் வாழ்க்கை என்ப தற்கொலைக்கு ஒப்பானது. அது எப்போதும் பாதகமான விளைவுகளையே எமக்கு ஏற்படுத்தி வருவதை வரலாறு தெட்டத் தெளிவாகக் காட்டுகின்றது.

மக்கள் மீது வன்முறையைக் கட்டவிழ்த்து விட்டு குடியிருப்புகளை விட்டு வெளியேற்றி முகாம்களில் எதிர்காலம் பற்றிய எவ்வித நம்பிக்கைகளுமற்றவர்களாக நடைப்பிணங்களாக மாற்றும் சிங்கள அரசின் திட்டத்தை முறியடித்து — புதிய குடியிருப்புகளை நிறுவி தேசிய வி தலைப் போராட்டத்தை பலப்படுத்துவது ஒவ்வொரு தமிழீழக் குடிமக்களினதும் கடமையாகும்.

# களத்தில் நின்று வேங்கைகள்

எமது போராட்ட வரலாற்றில் 15-03-92 ஞாயிற்றுக்கிழமை வரலாற்றுமுக்கியத்துவம் வாய்ந்தநாளாகும் அன்று முழுக்க முழுக்க போராளிகளால் இயற்றப்பட்டு பாடப்பட்ட ஒலிப்பதிவு நாடா வெளியிடப்பட்டது.

உலக விடுதலைப்போராட்ட வரலாறுகளைப் பார்க்கும் போது அன்னிய ஆக்கிரமிப்புக்களுக்கு எதிராக மாத்திரமே போராடி வருகின்றன. ஆனால் எமது போராட்டமானது சிங்கள இனவாதத்தின் ஆக்கிரமிப்பில் இருந்து விடுபடுவது மாத்திரம் நோக்கமல்லாது சமூகத்தில் இருக்கின்ற அடக்கு முறைகளிலிருந்தும், பொருளாதார பாதிப்புக்களிலிருந்தும் விடுபடவேண்டும் என்று போராடி வருகின்ற போராளிகள் தமது உணர்வுகளை ஆயுதத்தால் மட்டும் வெளிப்படுத்தாமல் கலை இலக்கியங்களாலும் வெளிக்கொணர ஆரம்பித்தனர். அத்தகைய செயற்பாடு தான் ஒலிப்பதிவு நாடாவாக உருப்பெற்றது.

இதற்கு முன்னரும் போராளிகளால் பாடல்கள் எழுதப்பட்டிருக்கின்றதே என்ற கேள்வி எழ முடியும். அவ்வாறு எழுதப்பட்ட பாடல்கள் சீருடையணிந்த போராளிகளாலும் எழுதமுடியும் என்ற உண்மையைத்தான் வெளிக்காட்டியுள்ளதே தவிர சிறந்த பாடகர்களை விட உணர்வு பூர்வமாகப் பாடமுடியும் என்பதை இந்த ஒலிப்பதிவு நாடா தான் விளக்கியுள்ளது.

இந்தியாவில் புகழ்பெற்ற கவிஞர்களான கண்ணதாசன், வைரமுத்து போன்றோர்கள் எல்லாம் ஆர்மோனியத்துடனே பாடல்களை எழுதுவார்கள். ஆனால் இந்தப் பாடலை எழுதிய போராளிக் கவிஞர் ஆயுதமும் பேனாவும் சேர்த்தே பாடல்களை எழுதியிருப்பது அவர்களின் திறமையைப் பாடல்களைக் கேட்கும் போது புரிந்து கொள்ள முடியும்.

**செல்வன்**

அதுமட்டுமன்று, இந்தப் பாடலுக்கான "மெட்டு" அமைக்கும் பாரிய வேலைப் பழு இசையமைப்பாளருக்கு இருந்திருக்காது. ஏனெனில், இதற்கான மெட்டை அமைத்து நாடா வடிவம் பெற முன்னரே களத்தில் பாடி மகிழ்ந்திருக்கிறார்கள்.

இதற்கு எந்தப் பக்கவாத்தியங்களும் கிடையாது. அப்படி பாவித்திருந்தால் பாத்திரங்கள்தான் பயன்பட்டிருக்கும்.

கடலில் போகின்ற எவர் கரையை அடைவார்கள் என்பது திரும்பி வந்த பின்னரே அறிய முடியும். அவ்வாறான ஆபத்தையும் பொருட்படுத்தாமல் விடுதலைப் போராட்ட வளர்ச்சிக்காகக் கடலில் பவனி வருவதை "கடலலை மீதினிலோர் பயணம்" என்ற பாடல் விளக்குகிறது.

ஒரு சிறு போராளி துள்ளிப் பள்ளிக்குப் போக வேண்டிய வயதில் களத்தில் நிற்கின்றான். அவன் தனது குடும்ப பாசங்களை அடக்கி வைத்திருக்கின்றான் என்பதையும் தலைவர் பிரபாகரனின் அன்பிற்குப் போராளிகள் அனைவரும் குழந்தைகள் என்பதையும் "குழந்தைகள் நாம் குழந்தைகள் நாம்" என்ற பாடலைக் கேட்பதன் மூலம் அறிந்து கொள்ளக் கூடியதாகவிருக்கிறது.

இவ்வாறான ஏனைய பாடல்கள் போராட்டத்தின் ஒவ்வொரு பகுதியையும் குறித்து நிற்கின்றது. இவ்வாறான வரலாற்று நிகழ்வுகள் மேலும் மேலும் உருப்பெற வேண்டும்.




ஒருவர்: என்ன மணியண்ணை! நாட்டில் மீண்டும் ஒரு தடவை தீ பரவுவதற்கு இனி அனுமதிக்கமாட்டேன் என்று ஜனாதிபதி சொல்லியிருக்கிறாரே. . .

மணியண்ணை: ஓமோம். முன்னர் அனுமதித்ததை இப்ப மறைமுகமாக ஒப்புக்கொள்கிறார்.

தொகுப்பு: அம்புலி.

## நன்னீர்வளத்தைப் பாதுகாப்போம்

குடா நாட்டில் நன்னீர் வளத்தைப் பொறுத்த வரையில் நன்னீர் ஊற்றுக்கள் உவர் நீராக மாறி வருவது பெரிய பாதிப்பைப் பல்வேறு துறைகளிலும் ஏற்படுத்தி வருகின்றது சரியான திட்டமிடலுடன் நன்னீர் வளத்தைப் பாதுகாக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். அல்லாவிடில் நீண்டகாலப் போக்கில் இந்நிலப் பரப்பு குடியிருப்புகளுக்குப் பொருத்தமற்றதாகி விடக்கூடிய ஆபத்து உள்ளதை இத்துறை சம்பததப்பட்ட ஆய்வாளர்கள், அக்கறையுள்ளவர்கள் தொடர்ச்சியாகச் சுட்டிக்காட்டி வருகின்றார்கள்.

நன்னீர் வளத்தைப் பாதுகாக்க வேண்டுமெனில் மழைநீர் வீணாக கடலினுள் செல்வது தவிர்க்கப்பட வேண்டும். குடாநாட்டின் எல்லாப் பகுதிகளிலும் பரவலாகக் காணப்படும் கேணிகள் மற்றும் சிறு நன்னீர்த் தேக்கங்கள் மூடப்படாமல் பாதுகாக்கப்பட வேண்டும். கடல நீரேரிகள் நன்னீர் ஏரிகளாக மாற்றப்பட வேண்டும.

இதைவிடப் புதிய புதிய நன்னீர் தேக்கங்கள் உருவாக்கப்பட வேண்டும். ஆனால் உண்மையில் நடப்பது என்ன? விவசாயமானது நீரிறைப்பைப் பொறுத்தவரை இயந்திரமயமாக்கப்பட்டு விட்டது. பெருமளவில் விவசாயத்தை மேற்கொள்ளும் போது இது அத்தியாவசிய தேவையாகும். மறுபுறம் பயிர்களுக்கு மிதமிஞ்சிய நீர் பாய்ச்சபபடுகின்றது மிகக் கூடிய அளவில் நிலத்தடி நீர் வெளியேற்றப்படுவதால் உவர் நீராக மாறும் வாய்ப்பு மேலும் அதிகரிக்கிறது இந்த நிலை தொடர அனுமதிக்க முடியாது. முடிந்தவரை ஒவ்வொருவரும தத்தமது சொந்த நிலங்களிலும் கிராமத்திலும்உள்ள நன்னீர்த்தேக்கங்களை ஆழப்படுத்த வேண்டும். பாதுகாக்க வேண்டும். புதிய நன்னீர்த் தேக்கங்களை உருவாக்க ஒன்றிணைந்து செயற்பட வேண்டும்.

தொகுப்பு ஈஸ்வரன்

# விழிப்பு

## அன்னை பூபதி

15-03-1988 அன்று மட்டு நகரில் மாமங்க வீதியில் குருந்த மரநிழலில் மேடையிட்டு உண்ணா நோன்பேற்றார்.

சண்டையை நிறுத்து! புலிகளோடு பேசு! ஏற்கக் கூடிய நிபந்தனைகளைத் தான் அம்மா இந்திய அரசுக்குப் போட்டார். ஆதிக்க வாதிகள் அம்மாவின் நிபந்தனைகளை அலட்சியம் செய்தனர்; பயமுறுத்திப் பணிய வைக்கப் பார்த்தனர். நெருக்குவாரங்களைக் கொடுத்துப் போராட்டத்தை நிறுத்திவிட முயன்றனர். புயலுக்குத் திரைபோட்டுப் பார்த்தார்கள். காட்டுத் தீயைக் கைகளால் மூடப் பார்த்தார்கள். தோற்றுப் போனது இந்திய அரசு. முப்பது நாட்கள் இந்த மண்ணுக்காகவும், மக்களுக்காகவும் அந்த மெழுகு வர்த்தி உருகியது.

19-04-1988 அன்னை பூபதி தமிழீழத்தின் மொத்தமான குரலாக பாரத அரசுக்குப் பாடமொன்றைச் சொல்லிவிட்டுத் தன் மூச்சை நிறுத்திக் கொண்டார். அந்நியர்கள் இந்த மண்ணை ஆக்கிரமிக்க வந்தால் இந்த மண் அடங்கிப் போகாது. பணிந்து போய்ப் பார்த்துக் கொண்டிருக்காது.

இந்த மண் போராடும் என்ற பாடத்தைப் புகட்டி விட்டு அந்தப் புகழுடம்பு பேச்சிழந்து போனது. அன்னை பூபதி தியாகத்தின் தோற்றப்பாடானாள்.

அன்பார்ந்த தமிழீழ மக்களே!

அன்னை பூபதியின் நாலாம் ஆண்டு நினைவு நாட்களை எதிர் வரும் 19-03-1992 தொடக்கம் 19-04-1992 வரை தமிழீழமெங்கும் கொண்டாடுவோம். உலகமெங்கும் இந்த நாட்களைப் பேச வைப்போம்.

அன்னை பூபதி ஒரு தனி மனித வடிவமல்ல. எங்கள் எல்லோரினதும் ஒட்டு மொத்தமான கருத்து வடிவம். விஸ்தரிப்புவாத மையிருட்டு எம் தாயகத்தின் மீது குவிந்திருந்த போது அதைக் கலைக்க வென்று எழுந்த கதிரவன் அவருக்கு நாங்கள் என்ன கைமாறு செய்வோம்...? நன்றியை எதிர்பாராத அந்த

(4 ஆம் பக்கம் பார்க்க)

# உள்ளூர் உற்பத்தியைப் பாதுகாப்போம்

மீண்டும் ஒரு சுதந்திர தேசமாகத் தன்னை விடுவித்துக் கொள்ள, தமிழீழம் தயாராகிக் கொண்டு வரும் நேரமிது. பலத்த உயிர், உடைமை இழப்புக்களை இதற்காகக் கொடுத்து விடுதலைக்காகப் போராடி வரும் தமிழீழ மக்களாகிய நாங்கள் எம தேசத்தின் விடுதலையை அதன் முழுமையான வடிவத்தில் பெற்றுக் கொள்வதே சரியானதாகும். தேசத்தின் விடுதலையானது இராணுவ ரீதியாகவும் அரசியல் ரீதியாகவும் அமைவதோடு மட்டுமல்லாது பொருளாதார ரீதியாக இன்னொரு நாட்டில் தங்கு நிலையற்றதாகவும் இருந்தால் தான், அது முழுமை பெற்றதாகும்.

இன்றைய நிலையில், நாம் அத்தியாவசியமான அத்தியாவசியமற்ற பல பொருள்களுக்கு சிறிலங்காவையே எதிர்பார்த்து நிற்கின்றோம். ஆனால் பல்வேறு பொருள்களை முழுமையாகவோ பகுதியாகவோ எமது மண்ணிலேயே உருவாக்கிக் கொள்ளும் ஆற்றலை எமது மக்கள் கொண்டுள்ளனர்.

கடந்த இரு ஆண்டுகளாக எம்மீது சுமத்தப்பட்ட பொருளாதார முற்றுகையின்போது இங்கு பலவேறு உற்பத்தியாளர்கள் தோன்றி, தமது உற்பத்திகளைச் சந்தைப்படுத்தி எமது தேவைகளை நிரப்பியதை நீங்கள் அறிவீர்கள். எமது தேசம் பொருளாதார ரீதியாக, சீர்குலையும்; இதன் மூலம் எமது மக்கள் தனது காலில் மண்டியிடுவார்கள் என்று மனப்பால் குடித்த எதிரி, தான் எம்மீது திணித்த பொருளாதாரத் தடையினால் இன்று தானே பாதிக்கப்பட்டிருப்பதை உணரத்தொடங்கியுள்ளான்.

பொதுவாக சிறிலங்காவின் உற்பத்திப் பொருள்களின் 1/3 பகுதி வட தமிழீழத்திலேயே சந்தைப்படுத்தப்பட்டு வந்தது இவை எதிரியால் நிறுத்தப்பட்டதால், இன்று சிறிலங்காவின் 1/3 பகுதி உற்பத்திகள் தேங்கியுள்ளன. 1/3 பகுதி தொழிலாளர்களின் வேலை முடக்கப்பட்டுள்ளது. 1/3 பகுதி இலாபம், வரிப் பணம் என்பன அவனுக்குக் கிடைக்காமல் போயிற்று.

அதேவேளை எமது மக்கள் இவற்றிற்கான மாற்றுப் பொருள்களை இங்கேயே உற்பத்தி செய்யத் தொடங்கினர் இதனால் வேலைவாய்ப்பற்று கொடிய வறுமையால் வாடிக் கொண்டிருந்த பல தமிழ் மக்கள் வேலை வாய்ப்பை இங்கு பெற்றனர். எமது பணம் சிறிலங்காவிற்குச் செல்லாமல் இங்கேயே பயன்படுத்தப்பட்டது. புதிய தொழில் நுட்பங்கள் வளர ஆரம்பித்தன. பல இடர்ப்பாடுகள் இருப்பினும், உற்பத்திகள் அதிகரிக்கத் தொடங்கியது; மீண்டும் எமது தேசம் தன்னம்பிக்கையுடன் நிமிரத் தொடங்கியது.

சுறுசுறுப்பான கடும் உழைப்பாளிகளாகிய எமது மக்கள் இவ்வாறு தம்மை நிலை நிறுத்திக்கொள்ளத் தொடங்கியதும், விழித்துக்கொண்ட சிறிலங்கா அரசு இன்று எமது பிரதேசத்தினுள் தனது உற்பத்திப் பொருட்களை அனுப்பி, சிறுகச்சிறுக வளர்ந்து வந்த எமது உற்பத்திப் பொருட்களை ஒரேயடியாக நசித்துவிடத் துடிக்கின்றது.

இன்றைய நிலையில், எமது உற்பத்திப்பொருட்கள் அழிக்கப்படுமாயின், இனி என்றைக்குமே அவை தலைதூக்க முடியாமல் போய்விடும் ஆபத்து நிறையவுள்ளது.

வரலாற்றின் பக்கங்களைப் புரட்டினால் விடுதலைக்காகப் போராடியநாடுகளும்விடுதலை பெற்ற நாடுகளும் கூட-தமது உற்பத்திப் பொருள்களைப் பாதுகாத்ததையும். வளர்த்ததையும் நாம் காணலாம். இந்தியத் தேசிய விடுதலைப் போராட்டத்தில் அந்நிய துணிவகைகளை மக்கள்வீதிகளில் போட்டுக் கொளுத்தினர். மாறாக தமது நாட்டில் நெய்யப்பட்ட அழகு குறைவான முரட்டுக் கதர்த்துணிகளை அணிந்தனர். இன்று கூட, அந்த நாட்டில் தலைவர்களும் மற்றும் பலரும் கதராடைத் துணிகள், அணிவதையே பெருமையாகக் கொள்கின்றனர்- இவ்வாறு தனது உற்பத்திப் பொருள்களுக்குக் கௌரவமளித்ததால், அந்த நாடு தொழில் வளர்ச்சி பெற்ற நாடுகளில் ஒன்றாக வளர்கிறது பாரிய வளர்ச்சியடைந்த மேலைத்தேய நாடுகள்கூட ஜப்பானியப் பொருள்கள் பெருமளவில் இறக்குமதியாவதை அறிந்து, அதற்கெதிராக, தடுப்பு நடவடிக்கைகளில் தீவிரமாக இறங்கியுள்ளன. பல்வேறு நெருக்கடிகளுக்கு முகம்கொடுத்தே எமது உற்பத்தியாளர்களும் தமது பொருள்களை உற்பத்தி செய்து, சந்தைப்படுத்தி வருகின்றனர். இந்நிலையில், அத்தியாவசியமற்ற பல பொருள்களைக் கூட, எம்மீது சிறிலங்கா அரசு திணித்துவருகிறது

பல்வேறு வசதிகளைக் கொண்ட அந்நிய உற்பத்தியாளர்களின் பொருட்களுடன் தரத்திலும், விலையிலும் எமது உற்பத்திப் பொருள்கள் ஆரம்பத்தில் போட்டி போட முடியாமல் இருப்பினும், காலக்கிரமத்தில் அந்த நிலையை அவை அடைந்துவிடும். அதுவரைக்கும் எமது உற்பத்திப பொருள்களைப் பாதுகாப்பதும், வளர்ப்பதும், அவற்றினைப் பாவிப்பதும் எம் ஒவ்வொருவரினதும் கடமையாகும். இதன் மூலமே, தமிழீழம் தனது கால்களில் நிமிர்ந்து நிற்கும் தகுதியைப் பெற்றுக் கொள்ளும். இந்த வகையில் இன்று சிறிலங்காவிலிருந்து வரும் தும்புத்தடி விளக்குமாறு, இனிப்பு, மென்பானங்கள், கோடியல், ஜாம் வகைகள் என்பன மீது வரிவிதிப்புச் செய்து, எமது உற்பத்தியாளர்களைப் பாதுகாக்க எண்ணியுள்ளோம். அதன் மூலம், பெறப்படும் பணம் எமது உற்பத்தியாளர்களை ஊக்குவிக்கவும், எமது சுயசார்புப் பொருளாதாரத்தை வளர்க்கவும் பயன்படுத்தப்படும். எமக்கு அறிவிக்கப்படாமல் சிறிலங்காவிலிருந்து உள்வரும் மேற்படி பொருள்கள் பறிமுதல் செய்யப்படும். எதிர்காலத்தில் எமது நாடு உலக அரங்கில் பொருளாதார ரீதியில் வலிமை பெற நாம் அனைவரும் திடசங்கற்பம் பூணுவோம்.

இவ்வாறு தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியற் பிரிவு தெரிவித்துள்ளது.

# வீரத்தின் வித்துக்கள்

**11-03-92**

ஆனையிறவு தட்டுவான்கொட்டிப்பகுதியில் இராணுவத்துடனான நேரடி மோதலில் வீரச்சாவடைந்த

★ கப்டன் சிறிசங்கர்
★ லெப். டேவிட்

**12-03-92**

திருநெல்வேலியில் இடம்பெற்ற எதிர்பாராத விபத்தில் உயிரிழந்த

★ வீரவேங்கை ஆண்டாள்

**15-03-92**

மட்டக்களப்பில் சுற்றிவளைக்க முற்பட்ட இராணுவத்தை வழிமறித்து தாக்கியதில்வீரச்சாவைத்தழுவிக்கொண்ட

★ வீரவேங்கை வேணு (சிவலிங்கம் - சுந்தரமூர்த்தி)

**17-03-92**

மணலாறுகொக்குத்தொடுவாய்இரா்ணுவமுகாமிலிருந்து வெளியேறிய இராணுவத்தின் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலில் வீரச்சாவடைந்த

★ லெப்டினன்ட் ஈழவன் ( அரியரத்தினம் பிரதீப் குமார், குரும்பசிட்டி)
★ 2ஆம் ,, செம்மணச்செல்வன் ( குரு ) [ வீரசிங்கம் ஜெயராசா நாவிதன்வெளி, கல்முனை ]
★ 2ஆம் ,, தகையான் (தாஸ்) [ ஆரியரத்ன, லால்சிறி ஆரியதிலக விபுலானந்தர் வீதி, வாழைச்சேனை ]
★ 2ஆம் ,, புவியழகன் [ லூவிஸ், மாத்தூண் ] வாழைச்சேனை
★ 2ஆம் ,, இராசன் [ வல்லிபுரம் கேமராஜா கோப்பாய் ]
★ 2ஆம் ,, ஆண்டகை [சிவசுந்தரம் சுரேஸ் குமார், கும்புறுபிட்டி திருகோணமலை
★ வீரவேங்கை கூர்வேல் [ சுந்தரம்பிள்ளை விஜய குமார் முறிகண்டி]
★ ,, ,, இளங்குன்றன் [அப்புலிங்கம்ஜெகதீஸ்வரன் அச்சுவேலி
★ வீரவேங்கை இராமநாதன் (சிவலிங்கம் சிவபாலன் பாரதிபுரம் கிளிநொச்சி )
★ ,, ஞானி ( இராசரத்தினம் வைகுந்தம் அல்வாய், பருத்தித்துறை )
★ ,, குகனேஸ்வரன் (கசீலன்) (அந்தோனி ஸ்ராலின் சிலாவத்தை, முல்லைத்தீவு )

**18-03-92**

கொக்குத்தொடுவாயிலிருந்து வெளியேறிய இராணுவத்தோடு இரண்டாவது நாளாக தொடர்ந்து இடம் பெற்ற மோதலில் வீரச்சாவடைந்த

★ வீரவேங்கை இளஞ்சேரலாதன் ( கனகசபை சுரேஸ்குமார் மத்தியவீதி திருகோணமலை)
★ ,, பவளராசன் (இரத்தினம் ஞானப்பிரகாசம், புனிதயூட்வீதி, பேசாலை)

மட்டக்களப்பு மாவட்டம் முந்திரியம் பள்ளத்தில் இராணுவத்துடனான நேரடிமோதலில் வீரச்சாவடைந்த

★ கப்டன் சேது ( சின்னத்துரை இரவிச்சந்திரன், கோவில்போரதீவு )
★ லெப் தீபன் (சுந்தரம் சுதாகரன் ஆண்டாள்வெளி
★ 2ம் ,, விதுரன் ( கந்தையா ஜீவா துணுகலை) தோட்டம் )

**19-03-92**

முல்லைத்தீவு இராணுவ முகாமிலிருந்து வெளியேறிய இராணுவத்துடனான மோதலில் வீரச்சாவடைந்த

★ லெப் ஆதவன் ( சுப்பிரமணியம் பிரபாகரன், முல்லைத்தீவு)

மணலாறில் தொடர்ந்து நடைபெற்ற சண்டையில் வீரச்சாவு அடைந்த

★ லெப். ஒள்ளியன் ( ஆனந்தகுமார் சீனித்தம்பி குணரத்தினம் பழுகாமம், மட்டக்களப்பு)
★ லெப். புலித்தவன் (அமுதன்) செல்வம் செல்வேந்திரன் பஞ்குடாவெளி செங்கலடி மட்டு)
★ வீரவேங்கை தில்லையழகன்(கிட்ணன்) கறுப்பையா சிவகுரு பிள்ளையார் கோவிலடி பெரியதம்பனை வவுனியா
★ வீரவேங்கை தமிழ்மாறன் ( அந்தோனிப்பிள்ளை லோறன்ஸ் ) பூதல்வயல் தண்ணீரூற்று முல்லை.
★ வீரவேங்கை இளம்வழுதி ( அந்தோனிமுத்து டொமினிக் ) 64 D நாவற்குழி வீடமைப்புத்திட்டம் நாவற்குழி
★ மேஜர் ஜெயரன் ( சாள்ஸ்) கந்தையா ஐங்கரன் புளியம்பொக்கணை, பரந்தன், கிளிநொச்சி.
★ லெப். புகழ்வேந்தன் (சலன்) (நாகராசா சிவநேசன்) மணக்சேனை, மூதூர், திருக்கோணமலை.
★ 2 ஆம் லெப். செல்லத்துரை (விக்னா) (மகாலிங்கம் பாஸ்கர்) புதுக்குடியிருப்பு, முல்லைத்தீவு
★ லெப் இராகுலன் (ஐயாத்துரை சிவகுமாரலிங்கம்) ஒட்டிசுட்டான், முல்லைத்தீவு.
★ 2 ஆம் லெப். ஜெயா (மாணிக்கம் தியாகராசா) உருத்திரபுரம், கிளிநொச்சி.
★ 2 ஆம் லெப். யோகேந்திரன் (பொன்னம்பலம் ஆனந்தன்( துறைநீலாவணை, மட்டக்களப்பு.
★ 2 ஆம் லெப் வாமன் (சிவலிங்கம் லிங்கன்) மாவடிச்சேனை, வெருகல், மூதூர்.
★ 2 ஆம் லெப். இளங்கோ (சித்திரவேல் அசோக் குமார்) கட்டைப்பறிச்சான், மூதூர், திருமலை)
★ 2 ஆம் லெப். அசோகன் (சுபபையா யோகராசா மாங்கேணி, வாழைச்சேனை, மட்டக்களப்பு.
★ வீரவேங்கை எல்லாளன் (நாதன் சிறி) அக்கரைப் பற்று, அம்பாறை.
★ 2 ஆம் லெப். சந்திரன் (இராசு ஆறுமுகம்) இரண்டாம் கட்டை, நெலுக்குளம், வவுனியா.
★ வீரவேங்கை திருச்செல்வம (நாகமணி பிரேமானந்தன்) பாண்டிருப்பு, கல்முனை, அம்பாறை.
★ வீரவேங்கை ஆண்டாள் (யோகேஸ்வரி கந்தையா) புதுக்குளம், வவுனியா. ஆகியோருக்கு



## எமது வீரவணக்கம்

தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியற் பிரிவு சார்பாக மக்களுறவு கொள்கை முன்னெடுப்புப் பிரிவால் 23-3-92 அன்று வெளியிடப்பட்டது.